**கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர நம்பிக்கைப் பொறுப்பின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்க இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கைப் பொறுப்பின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நம்பிக்கை பொறுப்பினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
நம்பிக்கைப் பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தா்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள்

நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு / இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 70 மற்றும் 88 ஆம் பந்திகளின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்கள் திரவத்தன்மை வரிசைக்கு ஏற்ப ஐந்தொகை மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இவ்விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி நிதி நிலைமை கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இல்<br>• 9 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,951,495 ஆன சேமிப்புக் கணக்கின் மீதி நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது | |

| | |
|---|---|
| • 27 ஆம் பந்தியின் (அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் நேர் முறைமை மற்றும் நேரில் முறைமை ஆகிய இரண்டு முறைமைகளில் ஒன்றினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்காக தெளிவான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை கருத்திற் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான வைப்பிற்குரிய மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 10,335 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வரி அறவிடுவதற்கு முன்னர் பெறுமதிக்குரிய குத்தகை தொகை சேர்த்தல் காரணமாக மேற்குறித்த வேறுபாடு அவதானிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் சீராக்கப்பட்டு சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிக்கை யிடுகின்றேன். | நிறுத்தி வைத்தல் வரித்தொகை கழிப்பதற்கு முன்னர் வட்டி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தினால் நம்பிக்கை பொறுப்பிற்காக 2018 யூன் 25 ஆந் திகதி முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 20 மிலலின் நிலையான வைப்பிற்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,216,849 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் 1,000,000 என ரூபா 216,849 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளில் பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வட்டி வருமானம் ஒரு மில்லியனாக இருந்தமையால் 2018 ஆம் ஆண்டிற்காக அவ்வட்டித் தொகை எதிர்பார்க்கப்பட்டிருந்ததாக குறிப்பிடுகின்றேன். | வட்டி சதவீதத்தின் பிரகாரம் வட்டி கணக்கிடப்பட வேண்டும் |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா | சனாதிபதி அவர்களால் பெயரிடப்படுகின்ற மூன்று அங்கத்தவர்கள் உட்பட ஸ்ரீ | சனாதிபதி அவர்களால் பெயரிடப்படுகின்ற மூன்று அங்கத்தவர்களும் அதில் | சட்டத்தின் பிரகாரம் மதியுரை குழுவொன்று |

| | | | |
|---|---|---|---|
| நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டம்<br>------------------------------<br>8(1) ஆம் பிரிவு | தலதா மாளிகையின் தியவடன நிலமே, கண்டி சுற்றுப்புற தேவாலயங்களின் சுற்றுபுற பஸ்நாயக்க நிலமேக்கள், கண்டி நிர்வாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளருடன் கூடிய மதியுரைக் குழுவொன்று நியமிக்க வேண்டிய போதிலும் அக்குழுவினை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் இதுவரை அதற்காக மூன்றுபேர் நியமிக்கப்படவில்லை. எனினும் குழுவொன்று நியமிக்கப்படாதிருந்த போதும் இந்த மதியுரைக் குழுவின் ஏனைய உறுப்பினர்களால் தேவையான சந்தர்ப்பத்தின் போது ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நியமிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை<br>------------------------------<br>4.1 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு ஒன்று இல்லாமல் குறித்த நிதியாண்டில் எவ்வித செலவினமொன்றையும் மேற்கொள்ள முடியாதென அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எந்தவொரு அமைச்சினாலும் அல்லது திணைக்களமொன்றிலும் எசல பெரஹரவிற்கு வருடாந்த நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை ஆதலால் நம்பிக்கை பொறுப்பில் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எசல பெரஹர பொறுப்பும் வருடாந்த பாதீட்டினை திணைக்கள பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 263,607 மிகையாக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 741,890 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 478,283 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் இவ்வீழ்சசிக்கு இருக்கை வருமானம் குறைவடைந்தமை மற்றும் நினைவிழக்கச் செய்யும் பதவியணியினர் செலவினம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 சனவரி 01 ஆந் திகதி முதல் 2018 யூன் 25 ஆந் திகதி வரை ரூபா 20,000,000 தொகையினை பொது | 2019 மற்றும் அடுத்து வரும் ஆண்டுகளுக்காக இலங்கை வங்கியின் | பொது நம்பிக்கையாளர் திணைக்களம் |

| | | | |
|---|---|---|---|
| | நம்பிக்கையாளர் திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கில் நிறுத்திவைத்த காரணத்தினால் பெரஹர பொறுப்பிற்கு நிதிசார் நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. | வட்டி விகிதத்தின் அடிப்படையில் வட்டித் தொகையை தருமாறு பொது நம்பிக்கையாளர் திணைக்களத்திற்கு அறிவத்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். | துரிதமாக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் 11 மாதங்களில் ரூபா 02 மில்லியனுக்கு மேற்பட்ட இறுத மீதிகள் நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட போதும் இப் பணத்தை கூடுதலான வட்டியுடன் நிலையான வைப்புக் கணக்கொன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேமிப்புக் கணக்கொன்று பணத்தை பெற்றுக் கொள்வது இலகுவாக இருப்பதாலேயே பேணிச் செல்லப்படுவதாக அறிக்கையிடுவதுடன் இவ்வாண்டில் அத்தொகையில் ஒரு பகுதியொன்று நிலையான வைப்பொன்றுக்கு மாற்றுவதற்கு நம்பிக்கை பொறுப்பினால் கருத்தில் கொண்ட போதும் காணப்பட்ட சமூக நிலைமை காரணமாக இதனை செயற்படுத்த முடியாமல் போயிருந்தது. | நிலையான வைப்புக்களில் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடனக் கலைஞர்களுக்கு வழங்கப்பட வேண்டிய படிகள் அவர்களின் சேவைக்கு கௌரவமொன்றாக அல்லது உபகாரமொன்றாக கருதி வழங்குவதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால் முன்னைய ஆண்டின் நடனக்காரருக்கு செலுத்த வேண்டிய ரூா 8,000 தொகை கொடுப்பனவு செய்யப்படாமல் மீளாய்வாண்டின் திரண்ட நிதிக்கு மாற்றப்பட்டிருந்தது. | குறித்த நடனக் கலைஞருக்கு அறிவிக்குமாறு குறிதத் நிறுவனம் தெரியப்படுத்தப் பட்டுள்ளதாக | ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடனக் கலைஞர்களை ஊக்விப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென |

| | | |
|---|---|---|
| (ஆ) அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாமல் ஆசனங்களை வழங்குதல், அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட நபரகளால் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத நாட்களில் ஆசனங்களை வழங்குதல் மற்றும் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட அளவினை விட மிகையான ஆசனங்களை வழங்கியதன் காரணமாக ரூபா 18,400 ஆன அனுமதிப்பத்திர வருமானமொன்றும் ஆசனத்தின் எண்ணிக்கை யில் அறவிடப்படுகின்ற தண்டப்பணத்தின் கூட்டுத் தொகை ரூபா 207,250 ஆக இருந்தது. | அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் ஆசனங்களை வழங்கியிருந்த நிலையங்களிலிருந்து குறித்த தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நம்பிக்கை பொறுப்பினால் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் ஆசனங்களை வழங்கும் முகவர்களாலும் சில அனுமதிப்பத்திரதாரிகளால் அவர்களின் இடங்களில் ஏனை நபர்களுக்கும் ஆசனங்களை வழங்கும் சந்தர்ப்பங்களும் வங்கப்பட்டிருந்தன. இந்நிலைமை 2019 ஆம் ஆண்டின் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் . | அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக முறையான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையொன்று செயற்படுத்த வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின்இருக்கை வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 2,432,050 ஆல் அதாவது 33 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் ஆசனத்தின் மீது விதிக்கப்படும் கட்டணங்களை அதிகரித்து சரியாக அறவிடுவது ரொடர்பில் நிர்வாகம் கவனம் செலுத்துதல் வேண்டும். | முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக இருக்கை வருமானம் குறைவடந்தமை நித மிகை வீழ்ச்சியடைய காரணமாக இருந்தது. | பிரதான வருமான மூலங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நடனக் கலைஞர்களுக்கு நன்கொடைகள், நினைவிழக்கச் செய்யம் பதவியணியினருக்கான செலவினம் மற்றும் கிண்ணச் செலவினத்திற்கான மதிப்பீட்டு நிதிஏற்பாட்டினை விஞ்சி ரூபா 616,000 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் அதற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டுள்ளதாக அறிக்கையிடுகின்றேன். | மதிப்பீடு திருத்தங்க்ள செய்யப்படுமாயின் அவ்வாண்டிலேயே மேற்கொள்ள வேண்டியேற்படும் . |